**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097156

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு. Year: ஆண்டு 2019 FIR No. மு.த.அ. எண் 02/2019 Date: நாள் 09.07.2019

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 120(b), 167, 420, 465, 468 of IPC, 13(2) r/w 13(1)(c) and 13(1)(d) of PC Act 1988 r/w 109 IPC.
   (ii) Act சட்டம்: IPC & PC Act 1988 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2011-ம் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் தெரியவில்லை 2016-ம் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் அன்றைய Time : நேரம் 09.30 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.07.2019 Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக முன் விசாரணை (Preliminary Enquiry) அறிக்கை அடிப்படையில்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் பாப்பா கோவில் ஊராட்சி,
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி நாகப்பட்டினம் தாலுகா & மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S District இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர். M. அருள்பிரியா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1981 (d) Nationality : நாட்டினம் இந்தியா (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. Tr. கோ. பிரகாசம், S/o. கோபால், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர், பாப்பாகோவில் ஊராட்சி, நாகப்பட்டினம். 2. Tr. L. ராமச்சந்திரன், பஞ்சாயத்து தலைவர், -do-, 3. Tr. D. வெங்கடேசன், முன்னாள் ஒன்றிய பணி மேற்பார்வையாளர், -do-. 4. Tr. K. ராஜசேகரன், S/o. காசிநாதன், முன்னாள் ஊராட்சிமன்ற துணைத்தலைவர், -do-, 5. Tr. N. சேகர், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) நாகப்பட்டினம் யூனியன். 6. Tr. கண்ணன், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் நாகப்பட்டினம், 7. Tr. சேகர், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) நாகப்பட்டினம் யூனியன். 8. Tr. ராஜமோகன், முன்னாள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், நாகப்பட்டினம் யூனியன்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் முன்விசாரணை செய்து அறிக்கை பெறப்பட்டது.

* GCP 240-34(Type 2) 90 000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

இல்லை.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது:

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண் PE 164/2017/RDP/NP நாள் 19.04.2017-ன்படி வரப்பெற்ற நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, அந்தணப்பேட்டை அஞ்சல், பாப்பாகோவில், திரு.த.செந்தில்குமார், த/பெ.கணேசன், என்பவர் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியிருந்த புகார் மனுவின் பேரில் முன்விசாரணை (Preliminary Enquiry) செய்து அறிக்கை அனுப்பியதின் அடிப்படையில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண் PE 164/2017/RDP/NP நாள் 16.06.2019-ல் அளிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............—.............. பதவி ........—........ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature]

Signature of the Officer incharge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் [signature] 9/7/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.07.2019
10.30

-Trial re: Inst.
09/07/2019

Name: பெயர் M. அருள்பிரியா
Rank: நிலை காவல் ஆய்வாளர்
V&AC, நாகப்பட்டினம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**எதிரி-1** திரு.கோ.முருகையன், த/பெ.கோபால், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், பாப்பாக் கோவில் ஊராட்சி, நாகப்பட்டினம்.

**எதிரி-2** திரு.L.ரவிசந்திரன், பஞ்சாயத்து செயலர், பாப்பா கோவில் ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம். ( தற்போது ஆவராணி பஞ்சாயத்தில் பணிபுரிந்து வருகிறார்)

**எதிரி-3** திரு.D.வெங்கடேசன், முன்னாள் ஒன்றிய பணி மேற்பாாவையாளர், பாப்பாகோவில் ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம். (தற்போது ஒன்றிய பணி மேற்பார்வையாளர். வட்டார வளர்ச்சி அலுவலகம், தலைஞாயிறு, நாகப்பட்டினம் மாவட்டம்)

**எதிரி-4** திரு.K.விஜயரங்கன், த/பெ.காசிநாதன், முன்னாள் ஊராட்சிமன்ற துணை தலைவர், பாப்பாக்கோவில் ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்.

**எதிரி-5** திரு.N.சேகர், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம பஞ்சாயத்து), நாகப்பட்டினம் யூனியன், தற்போது வட்டார வளர்ச்சி அலுவலர், வேதாரண்யம், நாகப்பட்டினம்.

**எதிரி-6** திருமதி.மலர்விழி, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம பஞ்சாயத்து), நாகப்பட்டினம் யூனியன், தற்போது வட்டார வளர்ச்சி அலுவலர், (BP), நாகப்பட்டினம்.

**எதிரி-7** திரு.முருகேசன். முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம பஞ்சாயத்து), நாகப்பட்டினம் யூனியன், தற்போது வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம பஞ்சாயத்து), கொள்ளிடம், நாகப்பட்டினம்.

**எதிரி-8** திரு.ராஜகுமார், முன்னாள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், நாகப்பட்டினம் யூனியன் தற்போது துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கீழையூர், நாகப்பட்டினம்.

எதிரி-1 மற்றும் எதிரி-4 ஆகிய இருவரும் தலைவர் மற்றும் துணைத் தலைவராக பாப்பாக்கோவில் ஊராட்சியில் பணிபுரிந்த காலத்தில் (At the relevant period of the occurrence) குற்ற செய்கையின் காலத்தில் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 2(c) (i) (ii)-ன்படி பொது ஊழியர் ஆவார்கள். எதிரிகள் 2, 3, 5 முதல் 8 வரையிலானவர்கள் ஊழல் தடுப்புச் சட்டம், 1988 பிரிவு 2(c) (i) (ii)-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

**வழக்கு சம்மந்தப்பட்ட திட்டத்தின் நோக்கம்.**

Indira Awaas Yojana (IAY) வீடுகட்டும் திட்டத்ததை பொறுத்தவரை அரசின் வழிகாட்டி நெறிமுறைகளான (1) பயனாளிகளை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள்(Below Poverty Line-BPL) பட்டியலிருந்து தேர்வு செய்ய வேண்டும். (2)வீடு பணிகள் அனைத்தும் தொடர்புடைய பயனாளிகள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும் (3)வீடானது அடித்தளம். கூரை அளவு, கான்கீரிட் கூரை மற்றும் இறுதிநிலை என அடைந்தவுடன் நான்கு கட்டிடங்களில் அந்த நிலைக்கு ஏற்ப பட்டியல் தொகையானது பயனாளிக்கு ஊராட்சி மூலம் வழங்கப்பட வேண்டும். (4) அனுமதி வழங்கப்பட்ட வீட்டிற்கு கொடுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் விபரங்கள் உண்மைக்கு புறம்பானவை என தெரியவந்தால் அனுமதி ரத்து செய்வதுடன் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பது போன்ற வழிமுறைகளை பின்பற்றி பயனாளிகளை தேர்வுசெய்ய வேண்டும்.

**எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள்**

**எதிரி-1 திரு.கோ.முருகையன்,** த/பெ.கோபால், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், பாப்பாக் கோவில் ஊராட்சி, நாகப்பட்டினம் என்பவர் முன்னாள் பிரதமர் Indira Awaas Yojana (IAY) வீடுகட்டும் திட்டத்தின்படி வீடு ஒதுக்கீடு வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு செய்யாமல் பணம் ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வரை பெற்றுக்கொண்டு வசதி படைத்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

மேலும் 2012-13-ம் ஆண்டில் எதிரி-1 திரு.கோ.முருகையன் அவரது இறந்து போன தந்தை திரு.கோபால், த/பெ.காத்தான்-க்கு IAY திட்டத்தில் வீடு ஒதுக்கீடு செய்து கட்டப்படாத அந்த வீட்டிற்கு 20 ஆட்கள் வேலை செய்ததாக காண்பித்து ரூ.2,960/- அரசு தொகையை பெற்றுள்ளதன் மூலம் அரசு பணத்தை கையாடல் செய்துள்ளார்.

மேலும் 2015-16 ம் ஆண்டில் IAY திட்டத்தில் முருகையனின் 2-வது மனைவி தேவகி மற்றும் மருமகள் சுபரஞ்சனிக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்குரிய தொகை ரூ.70,000/- ஒவ்வொருவருக்கும் நாகப்பட்டினம் கனரா வங்கியில் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்டு வீடு கட்டப்படாததால் தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 2013-ல் மேற்படி தேவகி மற்றும் சுபரஞ்சனியின் கணவர் மதன்கோ தமிழக அரசின் நஞ்சை நிலத்திற்கான வெள்ள நிவாரணத்தொகை முறையே ரூ.2,12,855/- மற்றும் ரூ.51,750/- பெற்றுள்ளதால் மேற்படி நபர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் இல்லாதவராகிறார்கள்.

2011 முதல் 2016 வரையிலான காலத்தில் IAY திட்ட பயனாளிகள் பட்டியலினை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்றதற்கும் ஆன்லைன் பதிவிலிருந்து எடுக்கப்பட்டதற்கும் முரணாக உள்ளது. மேலும் எதிரி-1 திரு.கோ.முருகையன், அவரது இறந்து போன தகப்பனார் கோபால், த/பெ.காத்தான் பெயரில் வழங்கப்பட்ட காசோலையை மாற்றியதன் மூலம் ரூ.49,164/-ம் மற்றும் வீடு கட்டுமான பொருட்கள் ரூ.23,300/- பெற்ற வகையிலும் ஆகமொத்தம் ரூ.72,464/- அரசு பணத்ததை கையாடல் செய்துள்ளார்.

**எதிரி-2 திரு.L.ரவிச்சந்திரன்**, 2012-13ம் ஆண்டின் IAY திட்ட பயனாளிக்கு 23.05.2013 மற்றும் 13.09.2013 ஆகிய தேதிகளில் முறையே ரூ.27,215/- மற்றும் ரூ.21,949/-க்கு காசோலை எழுதி அதன் பின்புறம் உயிருடன் இல்லாத இறந்துபோன மேற்படி கோபால் கையெழுத்திற்கு பதிலாக K.கோபால் என்று தானே போலியாக கையெழுத்திட்டு வங்கியில் செக் மாற்றி பணத்தை பெற்று எதிரி-1 சொற்படி அவரிடம் கொடுத்து அரசு பணத்தை கையாடல் செய்ய உறுதுணையாக இருந்துள்ளார்.

**எதிரி-3 திரு.D.வெங்கடேசன்,** என்பவர் 2011-2016ம் ஆண்டு வரை ஒன்றிய பணி மேற்பார்வையாளராக (ஓவர்சீர்) இருந்துள்ளார். 2012-13ல் பஞ்சாயத்து தலைவர் எதிரி-1 திரு.முருகையனின் தந்தை IAY திட்ட பயனாளியான K.கோபால், த/பெ.காத்தான் ஏற்கனவே இறந்து போனவருக்கு IAY திட்டத்தில் வீடுகட்ட வேலை உத்தரவு வழங்கப்பட்டதும், பயனாளி மற்றும் ஆவணங்களை சரிபார்க்காமல் மேற்படி கோபால் வீடுகட்டாத நிலையில் அவருக்கு M-புக் எழுதி பரிந்துரை செய்ததில் அரசின் பட்டியல் தொகை இரண்டு நிலைகளில் 23.05.2013 மற்றும் 13.09.2013 ஆகிய தேதிகளில் முறையே ரூ.27,215/- மற்றும் ரூ.21,949/- எதிரி-1 பெற காரணமாக இருந்துள்ளார். மேலும் 2015-16ம் ஆண்டில் தேவகி மற்றும் சுபரஞ்சனி என்ற IAY திட்ட பயனாளிக்கு உதவும் விதமாக அவர்களது ஆவணங்களையோ, கட்டிய வீட்டினையோ பார்க்காமல் வீடுகட்டாத

அவர்களுக்கு மதிப்பீடு சான்று அளித்தும், பட்டியல் தொகை வழங்க பரிந்துரை செய்ததில், Public Financial Management System- PFMS மூலம் வழங்க மத்திய அரசின் தொகை 04.01.2016, 21.01.2016, 18.03.2016 மற்றும் 18.10.2016 ஆகிய தேதிகளில் முறையே ரூ.13,959/-, ரூ.16,625/-, ரூ.12,406/- மற்றும் ரூ.27,010/- என இருவருக்கும் தலா ரூ.70,000/- அவர்கள் வங்கி கணக்கில் செலுத்தப்பட காரணமாக இருந்துள்ளார்.

**எதிரி-4 திரு.K. விஜயரங்கன்,** என்பவர் 2011 முதல் 2016 வரை பாப்பாக்கோவில் பஞ்சாயத்து துணைத்தலைவராக இருந்துள்ளார். பஞ்சாயத்து தலைவர் எதிரி-1 முருகையனின் தந்தை K.கோபால், த/பெ.காத்தான் ஏற்கனவே இறந்து போனவர் 2012-13ம் ஆண்டில் IAY திட்ட பயனாளியாக தேர்ந்தெடுக்கப்பட்டது தெரிந்தும், மேற்படி நபருக்கு 23.05.2013 மற்றும் 13.09.2013 ஆகிய தேதிகளில் முறையே ரூ.27,215/- ரூ.21,949/- வழங்கப்பட்ட காசோலைகளில் துணைத்தலைவர் என்ற முறையில் கையெழுத்திட்டு அரசு பணத்தை கையாடல் செய்ய உறுதுணையாக இருந்துள்ளார்.

**எதிரி-5 திரு.N.சேகர்,** நாகப்பட்டினம் யூனியனில் வட்டார வளர்ச்சி அலுவலர் (பஞ்சாயத்து)ஆக பணி செய்துள்ளார். இவர் 2012-13ல் IAY திட்ட பயனாளி ஏற்கனவே இறந்துபோன K.கோபால், த/பெ.காத்தான் பற்றி விசாரிக்காமலும், ஆவணங்களை சரிபார்க்காமல் வேலை உத்தரவு வழங்கியும், மேற்படி நபர் வீட்டை கட்டியது குறித்து பார்க்காமலும் 23.05.2013 மற்றும் 13.09.2013 ஆகிய தேதிகளில் முறையே ரூ.27,215/- மற்றும் ரூ.21,949/- மேற்படி நபருக்கு வீடுகட்ட அரசின் பட்டியல் தொகை வழங்க உத்தரவு பிறப்பித்து அரசு பணத்தை எதிரி-1 கையாடல் செய்ய உறுதுணையாக இருந்துள்ளார்.

**எதிரி-6 திருமதி.மலர்விழி** என்பவர் கடந்த 22.04.2015 முதல் 28.02.2016 வரை நாகப்பட்டினம் யூனியனில் வட்டார வளர்ச்சி அலுவலர் (பஞ்சாயத்து)ஆக பணி செய்துள்ளார். இவர் 2015-16ல் IAY திட்ட பயனாளியான தேவகி, சுபரஞ்சனி ஆகியோர் வீடுகட்டியது குறித்து ஆய்வு நேரடியாக செய்யாமல், வீடுகட்டாத நிலையில் அவர்களது வங்கி கணக்கில் அவர்களுக்கு 04.01.2016 மற்றும் 21.01.2016 ஆகிய தேதிகளில் முறையே ரூ.13,959/- மற்றும் ரூ.16,625/- PFMS மூலம் மத்திய அரசின் பட்டியல் தொகை செலுத்தப்பட காரணமாக இருந்துள்ளார்.

**எதிரி-7 திரு.முருகேசன்,** என்பவர் 08.04.2016 முதல் 16.06.2017 வரை பணி செய்துள்ளார். அப்போது 2015-16 IAY திட்ட பயனாளிகளான 1. தேவகி, W/o.முருகையன் 2. சுபரஞ்சனி W/o.மதன்கோ ஆகியோர் வீடுகட்டாத நிலையில் 18.10.2016ந் தேதி மேற்படி ஒவ்வொருவருக்கும் தலா ரூ.27,000/- அரசின் நிதி Fund Transfer Order – FTO மூலம் IAY திட்டத்திற்காக அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்பட கம்பியூட்டரில் digital signature செய்து அரசு பணத்தை எதிரி-1 கையாடல் செய்ய உறுதுணையாக இருந்துள்ளார்.

**எதிரி-8 திரு.S.ராஜகுமார்,** என்பவர் 12.10.2015 முதல் 11.04.2017 வரை நாகப்பட்டினம் யூனியன் அலுவலகத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணி செய்துள்ளார். 2015-16 IAY திட்ட பயனாளிகளான 1. தேவகி, W/o.முருகையன் 2.சுபரஞ்சனி W/o.மதன்கோ ஆகியோர் வீடுகட்டாத நிலையில் FTO மூலம் அவர்கள் இருவருக்கும் 04.01.2016, 21.01.2016, 18.03.2016 மற்றும் 18.10.2016 ஆகிய தேதிகளில் முறையே ரூ.13,959/-, ரூ.16,625/-, ரூ.12,406/- மற்றும் ரூ.27,010/- என மொத்த தொகை ரூ.70,000/- அரசின் பணம் வழங்கப்பட digital signature செய்து அரசு பணத்தை எதிரி-1 கையாடல் செய்ய உறுதுணையாக இருந்துள்ளார்.

எனவே எதிரிகள் 1 முதல் 8 வரையிலானவர்கள் அரசு பணத்தை கையாடல் செய்யும் நோக்கத்தில் கூட்டுச் சதி செய்து அரசுக்கு பணம் இழப்பீடு செய்யவேண்டும் என்கிற நோக்கத்தில் பொய்யான ஆவணத்தை உருவாக்கி அதன் மூலம் தவறான ஆதாயம் பெற்றும் அரசுக்கு பண இழப்பை ஏற்படுத்தி மோசடி செய்தும், போலியான அவணங்களை உருவாக்கி அத்னை உண்மை என நம்பவைத்தும் மேலும் 1 முதல் 8 வரையான எதிரிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட அரசு உத்தரவினை பொறுத்து நம்பிக்கை மோசடி செய்தும் உள்ளார்கள். மேலும் குற்ற செய்கைக்கு உடந்தையாகவும் இருந்து செயல்பட்டுள்ளார்கள்.

ஆகவே மேற்சொன்ன எதிரிகள் 1 முதல் 8 வரையிலானவர்களின் செய்கைகள் குற்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமானதாலும், முதல் கட்ட விசாரணை அறிக்கையினை பரிசீலினை செய்தும், சென்னை ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்

துறை இயக்குநரக குறிப்பாணை PE 164/2017/RDP/NP நாள் 13.06.2018-ல் அளிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் பேரிலும் எதிரிகள் **1** முதல் **8** வரையிலானாவர்கள் மீது நாகப்பட்டினம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் **02/2019** சட்ட பிரிவுகள் **120(B), 167, 420, 465, 468** of IPC, 13(2) r/w 13(1) (c) and 13(1) (d) of Prevention of Corruption Act, 1988 r/w 109 IPC-ன்படி **09.07.2019** ஆம் தேதி காலை **09.30** மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

The original FIR is submitted to the Hon'ble Chief Judicial Magistrate-Cum-Special Judge, Nagapattinam and copies forwarded to the concerned higher authorities.

காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்
Ins/V&AC/NGT.
09.07.2019.